Kanton Zürich
Bildungsdirektion
**Volksschulamt**

# திட்டம் ALLE

## பெற்றோருக்கான தகவல்கள்

## தெரிந்தவற்றை பலப்படுத்துவதும், பயன்படுத்துவதும் அதோடு மேற்கொண்டு முன்னேற்றுவதும்

செக்குண்டார் வகுப்பிற்கு குறிக்கோள் இருக்கிறது, எல்லா இளைஞர்களையும் இயலுமான அளவு தகுந்த முறையில் ஒரு வேலைக்கான பயிற்சிக்கு அல்லது மேற்கொண்டு படிப்பதற்கு தயார்ப்படுத்துவது. டொச் பாஷையிலும் அதோடு கணக்கிலும் உள்ள திறமைதான் இங்கே முக்கியமாகக் கருதப்படுகிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சுவிசிலும் அதோடு சூரிச் மாநிலத்திலும் உள்ள இளைஞர்கள் ஒன்பதாம் வகுப்பிற்குப் பின் வாசிப்பதிலும் அதோடு கணக்கிலும் அதிர்ஷ்டவசமாக சராசரியை விட கூடுதலாக இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் அதேநேரம், எல்லா மாணவர்களும் கட்டாயக் கல்விக் காலம் முடிவதற்குள் பாஷையிலும் அதோடு கணக்கிலும் பின்னர் அவர்களினுடைய கல்விக்கும்- அதோடு தொழில் ரீதியான ஒவ்வொரு நாள் வேலைகளையும் சமாளிப்பதற்கு தேவையான அடிப்படையை பெற்றிருக்கவில்லை என்பதை இந்த முடிவுகள் காட்டுகின்றன. கல்வித் திணைக்களம் வெவ்வேறு செக்குண்டார் வகுப்புக்களுடன் சேர்ந்து ஆராய்ந்து, முக்கியமாக பெறுபேறுகள் குறைவான (செயல்த்திறன் குறைவான) மாணவர்களை இன்னும் குறிப்பாக முன்னேற்றுவதற்கும் அதோடு உதவுவதற்கும் முயற்சிகள் எடுக்கின்றன.

## இந்தத் திட்டம் ALLE

கல்வியில் வெற்றியடைவதற்கு ஒன்று தரமான கற்பிக்கும் முறையும், மற்றது ஒவ்வொரு மாணவர்களினதும் படிப்பதிலுள்ள ஊக்கமும் ஒரு முக்கியமான காரணமாகும். இந்த கன்னிமுயற்சி « சுறுசுறுப்பான கற்கும் நேரமும் அதோடு கல்வியில் வெற்றியடைவதும் ALLE » முயற்சிசெய்து, எல்லா மாணவர்களையும் இயலுமானஅளவு கணக்கு அதோடு டொச் பாடங்களில் அவர்களினுடைய திறமையை கூட்டுவதாகும். குறிக்கோள் என்னவென்றால், இளைஞர்களுக்கு தகுந்த கல்வியை வழங்க உதவுவதும் குறைவாக இருப்பவற்றில் பயிற்சியளிப்பதும் மேலும் அதன்மூலம் வேலைக்கான பயிற்சிக்கும் அதோடு மேற்கொண்டு படிப்பதற்கும் நன்கு தயார்ப்படுத்துவதாகும்.

**இந்தத் திட்டத்தில் பங்கெடுக்கும் செக்குண்டார் பாடசாலைகளின் நோக்கம் அதிலுள்ள பெறுபேறுகள் குறைவான மாணவர்களை கீழ்வரும் நடவடிக்கைகள் மூலம் முன்னேற்றுவது:**

## டொச்சிலும், கணக்கிலும் உள்ள அடிப்படைத் திறமைகள் கணக்கையும் அதோடு டொச்சையும் கற்பிக்கும் நேரத்தை திறமையாகப் பயன்படுத்தவது

**கணக்கில் மாணவர்களுக்கு அவர்களினுடைய அறிவுத்திறனை முன்னேற்றுவது, வேலைக்கு போவதற்கு முக்கியமாகும். நீங்கள் படிப்பு விஷயங்களில் முழுக் கவனம் செலுத்துவதன் மூலம் பயிற்சி செய்வதற்கும் அதோடு மீண்டும் அதைத் திருப்பிப் பார்ப்பதற்கும் போதுமான நேரம் கிடைக்கும். டொச் பாடத்திற்கு மொழி ஆற்றல் குறைவாகவுள்ள மாணவர்களுக்கு வாசிப்பதற்கு- அல்லது எழுதுவதற்கு ஒரு விஷேஷ பயிற்சி அளிக்கப்படும்.**

### விஷேஷ படிக்கும் சாதனங்கள்

**ஆரம்பப் பாடசாலையில் பெற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டு அதற்கு மேல் செக்குண்டார் வகுப்பில் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது, ஆனால் ஆரம்பக் கல்வியை செக்குண்டார் வகுப்பில் திரும்ப கற்பிக்க மாட்டார்கள். மாணவர்களுக்கு ஆரம்பப் பாடசாலை பாடங்களில் ஏதாவது தெரியாமலிருந்தால், அவர்களுக்கு செக்குண்டார் வகுப்பின் எதிர்பார்ப்புக்களை மிகவும் குறைவாக அல்லது முற்றாக நிறைவேற்ற முடியாது. அதனால் இந்த இளைஞர்கள் தெரியாதவற்றை அதற்குத் தகுந்த படிக்கும் சாதனங்கள் (பாடப் புத்தகங்கள்) மூலம் இன்னுமொரு முறை படிப்பது முக்கியம்.**

## கூடுதலான படிக்கும் நேரமும் அதோடு வீட்டுவேலைக்கு உதவுவதும்

**பெறுபேறுகள் குறைவான (செயல்த்திறன் குறைவான) மாணவர்களுக்கு வீட்டுவேலைகளை தானாக செய்வதில் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்படும். அதனால் இந்தத் திட்டம்** ALLE **வீட்டுவேலைகளை செய்வதற்கு உதவுவதோடு மேலும் அதன்மூலம் தனிப்பட்ட முறையில் படிக்கும் நேரத்தை கூட்டுகிறது. இந்த சலுகை முக்கியமாக டொச்சிலும் அதோடு கணக்கிலும்**

வீட்டுவேலைகளை செய்வதற்கு அளிக்கப்படுகிறது. இங்கு குறிப்பிட்ட வேலை-படிக்கும் விதம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படும். இந்த வீட்டுவேலை செய்யும் நேரத்தை பள்ளிக்கூட நேரஅட்டவணைக்கு ஏற்றவாறு அமைத்து மேலும் ஒரு ஆசிரியர் மேற்பார்வையிடுவார். இதில் இயலுமானஅளவு எல்லா மாணவர்களும் பயனடையலாம்.

## வகுப்பு உதவியாளர்களின் பணி

இந்தத் திட்டம் ALLE இல் வகுப்பு உதவியாளர்களின் உதவியுடன் மாணவர்களுக்கு தீவிரமாக உதவியும் அதோடு வழிகாட்டலும் கிடைக்கின்றது. ஒருபக்கம் இந்த உதவியாளர்களின் உதவியுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அவர்களின் முன்அறிவையும் அதோடு படிப்பின் தேவைகளையும் சொல்லிக் கொடுக்கலாம். மற்றப்பக்கம் உதவியாளர் ஆசிரியர்களோடு சேர்ந்தும் அதோடு கதைத்தும் ஒவ்வொரு மாணவர்களையும் கவனித்துக் கொள்ளுவார்கள். ஆனால் இந்த உதவியாளர்கள் தனிப்பட்ட பிள்ளையின் குறிப்பிட்ட முன்னேற்றத்திற்கு பொறுப்பெடுக்க மாட்டார்கள்.

## பாடசாலையில் ஊக்குவிப்பதை பலப்படுத்துவது

### ALLE திட்டத்தால் என்னுடைய மகள் / என்னுடைய மகன் இற்கு என்ன பயன்?

இந்தத் திட்டம் ALLE இல் கிட்டத்தட்ட 10 பாடசாலைகள் பங்கெடுக்கின்றன, அதற்குள் உங்களுடைய மகள் / உங்களுடைய மகன் படிக்கின்ற செக்குண்டார் வகுப்புக்களும் இருக்கும். இந்தத் திட்டத்தின் குறிக்கோள், இயலுமானளவு எல்லா மாணவர்களும் டொச்சிலும் அதோடு கணக்கிலும் அடிப்படை திறமைகளை பெறுவதாகும். பெறுபேறுகள் குறைவான மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், இந்த குறிப்பிட்ட நடவடிக்கைகள் மூலம் எல்லோரும் பயனடையலாம். ஒரு பாடத்தின் போது ஒவ்வொருவருடைய படிப்புத் தேவைகளையும் பார்த்து அதிக திறமைவாய்ந்த பிள்ளைகளும் அவர்களினுடைய திறமைக்கேற்ப ஊக்குவிக்கப்படுவார்கள். குறிக்கோள் என்னவென்றால், செயல்த்திறன் குறைவானவர்களையும் அதோடு கெட்டித்தனம் கூடிய மாணவர்களையும் அவர்களினுடைய படிப்புத் தேவைகளுக்கு ஏற்ப ஊக்குவிப்பது.

டொச் உம் / அல்லது கணக்கில் அடிப்படைத் திறமைகள் மட்டுமட்டாக இருந்தால், அதற்குரிய ஆசிரியர்கள் பெற்றோருடனும் சம்மந்தப்பட்ட மாணவர்களுடனும் ஒரு பேச்சுவார்த்தை செய்து பாடத்திட்டத்தை குறைத்து, தனிப்பட்ட இலக்கை தீர்மானித்து மேலும் இந்த இலக்கிற்கு தகுந்தாற்போன்ற படிப்பை தெரிவு செய்யலாம்.

இளைஞர்களுக்கு அவர்களினுடைய கல்விப் பாதைக்கு இன்னும் சிறப்பாக உதவுவதற்காகவும், அவர்களினுடைய படிப்பு முன்னேற்றத்தைப் பற்றி கருத்துக்கள் கூறி அதன்மூலம் படிப்பதை ஊக்குவிப்பதற்கும், ஆசிரியர்கள் பல வகுப்புக்களுக்குச் சென்று விஷேஷ தகுதி பெற்றிருக்கிறார்கள்.

பெயர் விவரக் குறிப்பு

**வெளியீட்டாளர்:**
Bildungsdirektion Kanton Zürich
Volksschulamt

புரட்டாதி 2015